## அன்புடன்

ராகம்: தோடி    தாளம்: ஆதி

இயற்றியவர்: தங்கம் பரமேஸ்வர**ன்**

### பல்லவி

அன்புடன் அழைப்பதை நீ கேளாயோ
ஆராவமுதனே வாராயோ

### அனுபல்லவி

கருங்குழல் அழகும் வேய்ங்குழல் கீதமும்
கண்டுள்ளம் குளிர கேட்டு மெய் சிலிர்க்க

### சரணம்

மாய உலக பாதையிலே
மார்க பந்து நீ என உணர்ந்தேன்
கரி ராஜன் முறை செவிமடுத்து
காத்தவன் நீ என அறிந்தேன்

கரை தெரியாத வாழ்க்கைக் கடலினில்
கலங்கரை விளக்கென ஒளிவீசிடவே

©Copyright 2001-2015, Thangam Parameswaran, Orleans Ontario Canada